**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்**

**OS. No. 43/2020**

**D.W.1 நாள் - 22.03.2022**

| | | |
|---|---|---|
| பெயர் | : | தமிழ்செல்வன் |
| த/பெயர் | : | ஜெயராமன் |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்து சர்வே எண்.58/2A 58/2C 58/4C என்று சொன்னால் சரிதான். 58/4D என்பது கிணறு என்றால் சரிதான். வசந்தன் மனைவி அங்காயி என்பவர் 31.07.1950 தேதியிட்ட வா.சா.ஆ.1 ன்படி பாதை பாத்தியம் குறித்து ஒரு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். கிரையப்பத்திரத்திலுள்ள வாசகங்களை நான் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். வா.சா.ஆ.1 எண் 58/2 ல் வடபுறத்தில் பாதை பாத்தியம் எழுதிக்கொடுத்துள்ளார்களா என்று கேட்டால் எழுதிக்கொடுக்கவில்லை. அந்த பாதை எந்த சர்வே எண்ணில் எந்த திசையில் செல்கிறது என்றால், அந்த பாதை 58/3 ற்கு செல்வதற்காக எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. எந்த சர்வே எண்ணின் வழியாக பாதை பாத்தியம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் எந்த சர்வே எண்ணும் குறிப்பிடவில்லை. வா.சா.ஆ.1 ல் பொன்னுசாமி பிள்ளை நிலத்திற்கும் மேற்கு, நல்லப்ப ரெட்டியார் நிலத்திற்கும் தெற்கு செல்லமுத்து பிள்ளை படையாச்சி நிலத்திற்கும் வடக்கு, எருமப்பட்டி எல்லைக்கும் கிழக்கு இதன் மத்தியில் நாகமரம் குட்டைக்கும் கிழக்கு எருமப்பட்டி எல்லைக்கும் கிழக்கு பு.ஏக்கர் 1.0 நிலம் என குறிப்பிடப்பட்டுள்ள நிலம் எந்த சர்வே எண் என்று கேட்டால் 58/2 ஆகும். மேற்படி சக்குபந்தியில் குறிப்பிட்டுள்ள நிலத்தில்தான் அங்காயி பாதைபாத்தியம் எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அங்காயி எனது பாட்டி என்று சொன்னால் சரிதான். எனது பாட்டி அங்காயி எழுதிக்கொடுத்த பத்திரத்தை நானும், எனது தகப்பனாரும் மறுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா-ஆ.1 ல்

ச.எண்.58/2 க்கு எனது பாட்டி அங்காயியை தவிர வேறு நபர்கள் யாரும் உரிமையாளர்கள் இருப்பதாக ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கின் 3 ம் வாதி பன்னீர்செல்வம் என்பவருக்கு எனது பாட்டி ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளாரா என்று கேட்டால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 26.8.1987 ல் எனது பாட்டி அங்காயி இவ்வழக்கு 3 ம் வாதி பன்னீர்செல்வத்திற்கு ஒரு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தாக வா.சா.ஆ.2 பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பிறகு வா.சா.ஆ.2 ஆவணம் பற்றி நான் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். 3.2.2012 ல் 3 ம் வாதியிடமிருந்து நான் ஒரு தடபாத்தியம் குறித்து ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொண்டதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அந்த பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணம் எந்த சர்வே எண் சொத்து சம்பந்தமாக எழுதப்பட்டது என்று கேட்டால் ச.எண்.58/2 ஆகும். நான் ச.எண்.58/2 ல் பன்னீர்செல்வத்திடமிருந்து தடபாத்தியம் குறித்து எழுதி பெற்றுக்கொண்டுள்ள பத்திரத்தில் மேற்படி சொத்து பன்னீர்செல்வத்திற்கு எப்படி பாத்தியப்பட்டது என்று கேட்டால் அங்காயி அம்மாள் 1987 ல் பன்னீர்செல்வத்திற்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்ததின் பேரில் பாத்தியம் என்று சொல்லியுள்ளார். அந்த ஆவணம் எண் என்னவென்று எனக்கு தெரியாது. அந்த ஆவணம் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். 3 ம் வாதி பன்னீர்செல்வத்திற்கு அவரது பாட்டி எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரப்படி ச.எண்.58/2 ல் பன்னீர்செல்வத்திற்கு சொத்து உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு பன்னீர்செல்வத்திற்கு உரிமை மற்றும் பாத்தியம் இல்லாத நிலையில் அவரிடம் நான் எவ்வாறு பத்திரம் எழுதி வாங்கினேன் என்றால் அவர் சொன்னதன் பேரில் நான் எழுதி வாங்கினேன். தற்போதும் பன்னீர்செல்வம் சொத்தில் அவருக்கு உரிமை பாத்தியம் இருப்பதாக சொல்கிறார் என்றால் சரிதான். மேற்படி 3 ம் வாதி

பன்னீர்செல்வத்திடம் நான் எழுதி வாங்கிய தடநடை பாத்திய ஒப்பந்த பத்திரம் செல்லத்தக்கது என்றால் சரிதான். தடநடை ஒப்பந்த பத்திரத்தில் எழுதப்பட்டுள்ள வாசகங்கள் உண்மையானது என்றால் சரிதான். அந்த பத்திரம் எழுதப்படும் தேதியில் நான் சார்பதிவாளர் அலுவலகம் சென்றிருந்தேனா என்றால் சென்றிருந்தேன். அன்று வாதி சடையனின் இரண்டு தானசெட்டில்மெண்ட் ரத்து பத்திரம், வாதி சடையனின் கிரய ரத்து பத்திரம் மற்றும் எங்களது தட்நடை ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்பட்டது. வா.சா.ஆ.6 முதல் 8 பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட விவரம் எவ்வாறு தெரியும் என்று கேட்டால் வில்லங்க சான்று போட்டுப்பார்த்து கேட்டேன். எவ்வளவு நாளில் வில்லங்கச்சான்று போட்டுபார்த்தேன் என்றால் பதிவுக்கு முன்பு வில்லங்கச்சான்று போட்டுப்பார்த்தேன். வில்லங்கச் சான்று போட்டு பார்த்ததில் அதில் எனது தாத்தா பெரியசாமி என்பவரின் சொத்தையும் அபகரித்து எழுதிக்கொண்டுள்ளார்கள் என்ற விவரம் தெரியவந்தது. தெரியவந்தவுடன் நான் நாமக்கல் நிலஅபகரிப்பு பிரிவில் புகார் கொடுத்தேன். அந்த புகாரை 9.1.2012 ல் கொடுத்தேன். அந்த புகாரை யார் விசாரித்தார்கள் என்று கேட்டால் ஆய்வாளர் பெயர் எனக்கு தெரியவில்லை. புகார் நடவடிக்கை கொடுத்தது நான் அல்ல. எனது சித்தப்பா தான் புகார் கொடுத்தார். ஆகவே புகார் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல எனக்கு தெரியும் நானும் நேரில் சென்றிருந்தேன். அது சம்பந்தமாக சடையனை அழைத்து விசாரித்தார்கள். ஒரு பாபு என்ற ஆய்வாளர் விசாரித்தார் என்றால் சரிதான். அந்த விசாரணையின் முடிவு என்ன ஆனது என்றால் எனது தாத்தா பெரியசாமியின் சொத்தை வாதி சடையன் மற்றும் பன்னீர்செல்வமும் அபகரித்து எழுதிக்கொண்டார்கள் என்பது தெரியவந்தது. தெரியவந்ததில் வாதிகள் அவர்களே மேற்படி பத்திரத்தை ரத்து செய்வதாக ஒப்புக்கொண்டார்கள். அது சம்பந்தமாக வாதிகளிடம் எதுவும் எழுதி வாங்கினார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. பன்னீர்செல்வம் அரசு ஆசிரியராக பணிபுரிகிறார். எனது சித்தப்பா கொடுத்த புகாரில் வாதி சடையன் மீது மட்டும் தான் புகார்

கொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல பன்னீர்செல்வத்தின் மீதும் தான் புகார் கொடுத்தோம். புகார் சம்பந்தப்பட்ட ஆவணம் என்னிடம் உள்ளது. எனது தாத்தா பெரியசாமியின் சொத்தை அபகரித்து எழுதிக்கொண்டதாக ஒப்புக்கொண்டார்கள் என்பதற்கு ஏதேனும் எழுதிக்கொடுத்துள்ளார்களா என்றால் எனக்கு நினைவில் இல்லை. விசாரணை அதிகார் பாபு சொன்னத்தின் பேரில் பத்தரங்கள் எழுதப்பட்டதா என்று கேட்டால் அவர் சொன்னதின் பேரில் எழுதப்படவில்லை. வாதிகளே ஒப்புக்கொண்டு ஆவணங்கள் எழுதிக்கொண்டார்கள். ஆவண ரத்து பத்திரத்தை வாதி சடையனும், பன்னீர்செல்வமும் அவர்களே தயார் செய்து கொண்டார்கள். அந்த ஆவண ரத்து பத்திரங்கள் அசல் என் வசம் உள்ளது. ஆவண எழுத்தார் யார் என்று கேட்டால் குணசேகரன் ஆகும். பன்னீர்செல்வம் எனக்கு எழுதிக்கொடுத்த தடநடை ஒப்பந்த பத்திரத்தின் ஆவண எழுத்தர் குணசேகரன் ஆவார். தற்போது ச.எண்.58/2 என்பது உட்பிரிவு ஆகிவிட்டது என்றால் சரிதான். ச.எண்.58/2A, 2C என்பதை 1 வது அயிட்ட சொத்தாக காண்பித்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று கேட்டால் சரிதான். ச.எண்.58/2B க்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. ச.எண்.58/2B என்பதை அயிட்டம் சொத்தாக காண்பிக்கவில்லை. ச.எண்.58/2B ல் எனக்கு உரிமை இருப்பதாக நான் பதிலுரையில் சொல்லவில்லை.ச.எண்.58/2B ல் 3 ம் வாதி வீடு கட்டி அனுபவித்து வருகிறாரா என்று கேட்டால் அனுபவித்து வரவில்லை. எந்த காலத்திலும் அதில் வீடு இல்லை. ச.எண்.58/2B ல் வேறு எந்த வீடுகளும் இல்லை என்று கேட்டால் சரிதான். ச.எண்.58/2A ல் வடபுறத்தில் ஒரு வீடு உள்ளது என்று சொன்னால் சரிதான். அது சிமெண்ட் அட்டை வேயப்பட்ட வீடா என்று கேட்டால் சரிதான். அந்த வீட்டில் யார் குடியிருக்கிறார்கள் என்று கேட்டால் தற்போது 1 ம் வாதியின் மகன் 4 ம்வாதி சந்திரன் குடியிருந்து வருகிறார். தென்புறத்தில் எனக்கு குடியிருப்பு வீடு உள்ளது என்றால் சரிதான். அது ஓட்டுவில்லை வீடு என்றால் சரிதான். எனது தாத்தா பெரியசாமிக்கு எழுதிக்கொடுத்த நபர்களுக்கு எவ்வாறு பாத்தியம் என்று கேட்டால்

பூர்வீகமாக பாத்தியம் என்று பி.வா.சா.ஆ.1, 2 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.1, 2 ஆவணத்தை தவிர ச.எண்.58/2 ல் எனது தாத்தா பெரியசாமிக்கு எழுதிக்கொடுத்த நபர்களுக்கு பாத்தியம் உள்ளது என்பதை காண்பிக்க அவர்களுக்கு பத்திரம் ஏதேனும் உள்ளதா என்று கேட்டால் அது எனக்கு தெரியவில்லை. ச.எண்.58/2 சொத்து எனது பாட்டி அங்காயிக்கு பாத்தியப்பட்டது என்று நானும், எனது பாட்டனார் பெரியசாமியும் ஒப்புக்கொண்டுவிட்டு தற்பொழுது மேற்படி சொத்தில் எனது பாட்டனாருக்கு பொதுவில் பேர்பாதி இருப்பதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. 3ம் வாதியிடமிருந்து நான் ச.எண்.58/2 ல் தடநடை பாத்திய ஒப்பந்த பாத்தியம் எழுதி வாங்கிக்கொண்டு தற்போது ஆவணங்களுக்கு எதிராக 3ம் வாதிக்கு ச.எண்.58/2 ல் பாத்தியம் இல்லை என்று சாட்சியம் அளிப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றால் சரியல்ல.

(ஆவணங்களை ஒப்படைத்து பி.வா.சா.1 சாட்சியம் அளிக்க வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)